
பட்டயம்
மலர் - 07
நவம்பர் - 2010
இதழ் - 1
Date of Issue : 01-11-2010
Place of Publication : 86 / 222H, Main Road, Panagudi - 627 109. Tirunelveli District, Tamil Nadu.
Volume : 7
Issue : 1
Price Per Copy : Rs.5.00
Double Action...
...Double Benefit
"LORD! SAVE ME FROM SINNERS AND SATAN" - PSALM 12/7, PSALM 11/3
"கர்த்தாவே! சத்துருவுக்கும் சாத்தானுக்கும் விலக்கி எம்மைக் காத்திடும்"
ஓசன்னா ஆலய வெளியீடு
www.hosannahchurch.in
"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

## கேள்வி - பதில்

**240. தேவனுக்குப் பிரியமான வஸ்திரம் எது?**

1. ஆதி 3/21; இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு தேவநீதியான தோல்வஸ்திரம் உள்ளவர்களாக வேண்டும்.
2. யோபு 29/14; நீதி நம் உடுப்பாய், வஸ்திரமாயிருக்க வேண்டும். (நீதியின் வஸ்திரம்)
3. சங் 132/16; இரட்சிப்பின் வஸ்திரம் (இரட்சிப்பு) ஏசாயா 61/10
4. ஏசாயா 52/1 : அலங்கார வஸ்திரங்கள் (ஆவியின் வரங்கள்)
5. ஏசாயா 61/10 : நீதியின் சால்வை
6. சகரியா 3/4 : சிறந்த வஸ்திரங்கள் (தேவன் அருளும் பரிசுத்தம்)
7. ஏசாயா 52/1 : வல்லமையின் வஸ்திரம் (தேவ வல்லமை)
8. மத் 22/11 : கல்யாண வஸ்திரம் (ஞானஸ்நானம் பெற்றபின் தரிப்பிக்கப்படும் வஸ்திரம்)
9. வெளி 3/18 : வெண் வஸ்திரம் (பரிசுத்தம் மேல் பரிசுத்தம்)

**241. நாம் சேவிக்கின்ற தேவனின் விசேஷித்த தன்மைகள் எவைகள்?**

1. அவரைப் போல பரிசுத்தமுள்ளவன் எவனும் இல்லை. அவரைப் போல பரிசுத்தம் தூதர்களில் இல்லை. அவரைப் போல பரிசுத்தம் தள்ளப்பட்ட தூதர்களிலும் இல்லை. ஏசாயா 6/3.
2. அவரைப் போல அன்புள்ளவன் எவனுமில்லை. அவர் சொந்த குமாரனையே நமக்காக ஈந்தார். அவரது ஒரே பேறான குமாரன் மாம்சத்தில் வந்து தம் சொந்த இரத்தத்தை நமக்காய் தந்தார். (யோ 3/16)
3. அவரைப் போல வல்லமையுள்ளது எதுவும் இல்லை. அவர் மனிதனிலும் வல்லமை மிக்கவர். தூதர்களிலும் வல்லமை மிக்கவர்; அசுத்த ஆவிகளை விட வல்லமை மிக்கவர். எல்லா சக்திகளுக்கும் மேலான சக்தி அவரிடத்திலுண்டு (ஆதி 17/1)

**242. பரலோகத்தில் தூதர்கள் எப்படி தேவனை ஆராதிக்கிறார்கள்?**

1. ஆமென் அல்லேலூயா ஓசன்னா என்று சொல் ஆராதிக்கின்றார்கள் -வெளி 19/4
2. வணக்கமாய் விழுந்து துதிக்கின்றன - வெளி 19/4
3. கர்த்தருக்குப் பயப்படும் பயத்துடன் தொழுகின்றன - ஏசாயா 6/2
4. முகத்தை மூடித் துதிக்கின்றன - ஏசாயா 6/2

5. இரவும் பகலும் துதிக்கின்றன - வெளி 4/8
6. தங்களைத் தாழ்த்தித் தொழுகின்றன - வெளி 4/10
7. சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் என்கின்றன - ஏசாயா 6/3
8. சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்கின்றன - வெளி 4/8
9. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமை பெறப் பாத்திரர் என்று சொல்கின்றன - வெளி 5/12
10. இயேசு கனம் பெறப் பாத்திரர் என்கின்றன - வெளி 5/12
11. இயேசு ஸ்தோத்திரம் பெறப் பாத்திரர் என்கின்றன - வெளி 5/12
12. இயேசு மகிமை பெறப் பாத்திரர் என்கின்றன - வெளி 5/12
13. இயேசு ஞானம் பெறப் பாத்திரர் என்கின்றன - வெளி 5/12
14. இயேசு பெலத்தைப் பெறப் பாத்திரர் என்கின்றன - வெளி 5/12
15. இயேசு ஐசுவரியத்தைப் பெறப் பாத்திரர் என்கின்றன - வெளி 5/12

**243. ஜீவ ஒளியைப் பெற வேண்டுமா?**

நம் தேவன் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருளில்லை (I யோவான் 1/5). கர்த்தரின் முகத்தில் வெளிச்சமுண்டு. அந்த வெளிச்சத்தை அவர் நம்மேல் வீச முடியும்; பிரசன்னமாக்க முடியும்; அந்த ஒளியினால் நம்மை நிரப்ப முடியும். நாம் மனம் திரும்பி அவரைப் பின்பற்றி அவரை அண்டிக் கொண்டால் நமக்குள் ஜீவ ஒளியைத் தருவார். அந்த வெளிச்சத்தை வாங்கி, உலகத்தில் வீசி, நற்கிரியைகள் செய்திடும் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் மாற வேண்டும். எப்படி சந்திரன் தன்னில் வெளிச்சம் இல்லாதிருந்தும் சூரியனிடம் வாங்கி வீசுகிறதோ அதைப் போல நாம் நீதியின் சூரியனாம் இயேசுவிடம் வெளிச்சம் வாங்கி எரிந்து பிரகாசிக்கும் விளக்காய் வாழ்ந்து தேவசித்தம் செய்து தேவ நாமத்தை மகிமைப்படுத்திட வேண்டும்.

**244. அவிசுவாச வார்த்தைகள் பேசலாமா?**

விசுவாசிக்கிறவர்கள் வாயில் அவிசுவாச வார்த்தைகள் எதிர்மாறான சூழ்நிலைகளிலும் வரக்கூடாது. ஜீவனும் மரணமும் நாவின் அதிகாரத்திலுள்ளது. (நீதி 18/21). எனவே சாத்தான் நம் அவிசுவாச வார்த்தைகளைக்கேட்டு அதன்படி செய்வான். நாம் நம்முடைய விசுவாசத்தை வசனத்தைக் கொண்டு வாயினால் அறிக்கை பண்ணினால் அதன்படி செய்ய நம் தேவன் வல்லவர். எனவே விசுவாச வார்த்தைகளை வாயினால் அடிக்கடி அறிக்கை பண்ண வேண்டும்.

கர்த்தர் நம்மைத் தீமையினின்று, சாபத்தினின்று வியாதியினின்று, சாத்தானிடமிருந்து, சத்துருக்களிடமிருந்து, பாவத்தினின்று அற்புதமாக இரட்சிப்பார்.

**245. விரோதிகளும் மனந்திரும்பும்படி ஜெபிக்க வேண்டுமா?**

நம்முடைய விரோதிகள் நமக்குத் தீமைகள் செய்யலாம். ஆனாலும் அவர்கள் ஆத்துமாக்களும் ஆண்டவரால் உண்டாக்கப் பட்டவைகள். எனவே எந்த ஆத்துமாவும் நரகத்தில் தள்ளப்படுவது அவருக்குப் பிரியமான காரியமல்ல. எனவே நம் விரோதிகளின் ஆத்துமாக்களும் மனந்திரும்பும்படியாக அவர்களுக்காக கடவுளிடம் வேண்டுதல் செய்ய நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அவர்கள் மனந்திரும்பும்படி அந்தரங்கத்தில் நாம் வேண்டுதல் செய்ய வேண்டும். (மத் 5/44)

**246. தண்டனைகளில் பெரிய தண்டனை எது?**

ஆயுள்தண்டனையைவிட தூக்குத் தண்டனை பெரியது. தூக்குத் தண்டனையைவிட நரக தண்டனை பெரியது. ஏனெனில் நரக தண்டனையில் ஆத்துமாவும் வேதனைப்படும். சரீரமும் வேதனைப்படும். நரக தண்டனை நித்தியமான தண்டனை. நரக தண்டனைக்கு முடிவு இல்லை. நரகத்தில் தள்ளப்பட்டபின் எவனும் அதினின்று தப்பிவிட முடியாது. நித்திய ஜீவன் உண்டு என்று விசுவாசிக்கிற நாம் நித்திய மரணமும் உண்டு என்பதை விசுவாசிக்க வேண்டும். அவியாத அக்கினி உண்டு. அது தண்ணீர் கடல் அல்ல ; கண்ணீர் கடலும் அல்ல ; அது அவியாத அக்கினிக் கடல் (மாற்கு 9/48, வெளி 20/10)

**247. களியாட்டுகளின் உதாரணங்கள் எவை?**

1. போதை வஸ்துக்களைப் பயன்படுத்துதல் - நீதி 23/20
2. இச்சைக்கேதுவாய் உடலை அசைத்து நடனம் பண்ணுதல் - மாற்கு 6/22
3. கீதவாத்தியங்களை உண்டுபண்ணி கர்த்தரில் களிகூராமல் இசைகளில் களிகூருதல். - ஆமோஸ் 6/5
4. பெரிய பாத்திரங்களில் மதுபானம் குடித்தல் - ஆமோஸ் 6/6
5. சிறந்த பரிமளதைலம் பூசிக்கொள்ளுதல் - ஆமோஸ் 6/6
6. தந்தக்கட்டில்களில் படுத்தல் - ஆமோஸ் 6/4
7. போஜன இச்சை உள்ளவர்களாயிருத்தல் - ஆமோஸ் 6/4
8. சோம்பல் உள்ளவர்களாய் இருத்தல் - I தீ 5/13

9. நேரங்களை வீணடித்தல் - எபே 5/15
10. வம்பு அளத்தல் - எபே 5/4
11. புத்தியீனமான பேச்சு - எபே 5/4
12. பிறரை வேடிக்கைப் பொருளாய் ஆக்கி சந்தோஷம் கொண்டாடுதல் - நியா 16/25
13. விக்கிரகாராதனையோடு புசித்து குடித்தல் - யாத் 32/6
14. வீண்வார்த்தைகளைப் பேசுதல் - I தீ 5/13

**248. கர்த்தருடைய தூதனானவராக யாருக்கெல்லாம் கர்த்தர் பழைய ஏற்பாட்டில் வெளிப்பட்டார்?**

1. ஆதாம் ஏவாளோடு உலாவுகின்ற கர்த்தராய், பேசுகிற கர்த்தராய், பேசி மகிழ்கின்ற கர்த்தராய் வெளிப்பட்டார். (ஆதியாகமம் 3/9, நீதி 8/31)
2. ஆகார் கர்ப்பவதியானபோது சாராளை அற்பமாக எண்ணினாள். சாராள் அவளைக் கடினமாக நடத்தியபோது அவள் அவளைவிட்டு ஓடிப் போனாள். கர்த்தருடைய தூதனானவர் அவளை வனாந்திரத்தில் கண்டு அடங்கியிருக்கும்படி சொன்னார். மகனுக்கு பெயரையும் கொடுத்தார். பிறக்கப் போவது ஆண் என்றும் பெயரையும் முன்னறிவித்தார். ஆகார் கர்த்தருடைய தூதனானவருக்கு காண்கிற தேவன் (லகாய்ரோயீ) என்று பெயரிட்டாள். (ஆதி 16/9-13)
3. ஈசாக்கு பால் மறந்தான். பின்னர் இஸ்மவேல் பரியாசம் பண்ணினான். தேவ நடத்துதன்படி ஆபிரகாம் இஸ்மவேலையும் ஆகாரையும் அனுப்பிவிட்டான். அவள் வனாந்திரத்திருந்த போது பிள்ளை சாகும் தருணத்தில் கர்த்தரின் தூதனானவர் பயப்படாதே என்று சொல்பவராய், பிள்ளையின் சத்தம் கேட்பவராய், வாக்குக் கொடுப்பவராய், வானத்திருந்து பேசுபவராய், கண்களைத் திறப்பவராய், தண்ணீர் துரவைத் திறப்பவராய், பெயர் சொல்க் கூப்பிடுபவராய் வெளிப்பட்டார். (ஆதி 21/14-19)
4. மோரியா மலையில் கர்த்தருடைய தூதனானவர் விசுவாசிகளை சோதிக்கிற தேவனாய், வானத்திருந்து பேசுகிற தேவனாய், கூப்பிடுகிற தேவனாய், பெயர் சொல்க் கூப்பிடுகிறவராய், நரபலியை விரும்பாத தேவனாய், சோதனையில் உதவி செய்கிற தேவனாய், பார்த்துக் கொள்ளும் தேவனாய், யெகோவா யீரேயாய், பகளை ஏற்றுக் கொள்ளும் தேவனாய், ஆசீர்வதிக்கின்ற

தேவனாய் வெளிப்பட்டார். அன்பின் ஆழத்தை அளக்கின்ற தேவனாய் வெளிப்பட்டார். (ஆதி 22/11-18)

5. தேவபர்வதமாகிய ஓரேபில் கர்த்தருடைய தூதனானவர் முட்செடி நடுவில் நிற்பவராய், அக்கினி சுவாலையில் நிற்பவராய், ஜுவாக்கச் செய்பவராய், பெயர் சொல்க் கூப்பிட்டவராய், பரிசுத்தராய், முற்பிதாக்களின் தேவனாய், வேதனைகளையறிந்த தேவனாய், விடுதலை வாக்களிக்கிற தேவனாய், நலமான தேசம் வாக்களிக்கிற தேவனாய், அழைக்கிற தேவனாய், ஆராதனையை வாக்களிக்கிற தேவனாய், நாமத்தை அறிவிக்கிற தேவனாய், அற்புதராய், அதிகாரம் தருகிறவராய் வெளிப்பட்டார்.(யாத்.3/1-12)
6. இஸ்ரவேன் சேனைக்கு முன்பாக தேவதூதனானவர் நடந்தார். (யாத் 14/19)
7. கர்த்தருடைய தூதனானவர் மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் வெளிப்பட்டார். சிம்சோனைக் குறித்து அறிவித்தார். அவன் இஸ்ரவேலை பெஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பான் என்றார். அதிசயம் என்னும் நாமத்தினால் வெளிப்பட்டார். அக்கினி சுவாலையில் ஏறிச் சென்றார். பயை ஏற்றுக் கொண்டார். (நியா 13/1-21)
8. எசேக்கியேலுக்கு மனுஷ சாயலாகக் காணப்பட்டார். இடுப்புக்கு மேல் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாகவும், கீழாக அக்கினிமயமாகவும் சுற்றிலும் வானவில் பிரகாசமும் காணப்பட்டது. (எசேக்கியேல் 1)
9. அனனியா மீஷாவேல், அசரியாவுக்கு அக்கினி மத்தியில் மனிதசாயல் உலாவுகிறவராய், அக்கினிக்குத் தப்புவிக்கிறவராய் வெளிப்பட்டார். (தானியேல் 3/21-28)
10. நீண்ட ஆயுசுள்ளவராய் தானியேலுக்கு வெளிப்பட்டார். சணல் நூல் வஸ்திரம் தரித்தவராகவும் வெளிப்பட்டார். (தானி 7/9,10)
11. முற்றிலும் அழகுள்ளவராய் சூலமித்தி கண்டாள். (உன் 5/15)
12. கர்த்தர் சீனாய்மலையில் அக்கினியில் இறங்கினார். (யாத் 19/18)

**249. கர்த்தர் எவைகளில் பரிசுத்தம் தரமுடியும்?**

a) வார்த்தையில் பரிசுத்தம் - எபே 4/29
b) பார்வையில் பரிசுத்தம் - மத் 6/22, 23
c) கேட்பதில் பரிசுத்தம் - பிர 7/5
d) ஆவியில் பரிசுத்தம் - I தெச 5/23

e) ஆத்துமாவில் பரிசுத்தம் - I தெச 5/23
f) சரீரத்தில் பரிசுத்தம் - I தெச 5/23
g) சிந்தையில் பரிசுத்தம் - பி 2 / 5
h) உணர்வுகளில் பரிசுத்தம் - பி 1 / 9
i) இதயத்தில் பரிசுத்தம் - I பேதுரு 1/22
j) மூளையில் பரிசுத்தம் - பி 2 / 5
k) மனசாட்சியில் பரிசுத்தம் - II தீ 1/4
l) உள்ளிந்திரியத்தில் பரிசுத்தம் - சங் 16/7
m) உளளான மனுஷனில் பரிசுத்தம் - எபே 3/16
n) வாழ்க்கையில் பரிசுத்தம் - எபி 12/14
o) வேலையில் பரிசுத்தம் - தானி 6/22
p) கிரியைகளில் பரிசுத்தம் } I பேதுரு 1/15
q) நடைகளில் பரிசுத்தம் - } I பேதுரு 1/15
r) உடைகளில் பரிசுத்தம் - I பேதுரு 3/3,4

**250. I. கர்த்தர் எவைகளில் இளைப்பாறுதல் தரமுடியும்?** மத் 11/28

1. சரீரத்தில்
2. இதயத்தில்
3. மூளையில்
4. ஆவியில்
5. ஆத்துமாவில்

**II. கர்த்தரின் ஜீவன் எவைகளில் காணப்பட முடியும்?**

1. சரீரத்தில் - (2கொரி 4/10) (எபே 5/30)
2. ஆவியில் - 1 கொ 6/17
3. ஆத்துமாவில் - யோவான் 10/10
4. புயத்தில் - உன் 8/6
5. இருதயத்தில் - உன் 8/6

**251. கர்த்தர் தம் தூதர்களை எக்காரியங்களுக்காக பயன்படுத்துகிறார்?**

1. வழிகளில் காத்திட - சங் 91/11
2. பாதம் கல்ல் இடறாதபடி காத்திட - சங் 91/12
3. ஏந்திக் கொண்டு போக - சங் 91/12
4. சிங்கங்களின் வாய்களை அடைத்திட - தானி 6/22
5. சங்கிகளை விழப்பண்ண - அப் 12/7

6. சிறையிருப்புகளினின்று விடுவித்திட - அப் 12/10
7. வரப்போகிற காரியங்களை அறிவித்திட - அப் 27/24
8. கர்த்தரின் வார்த்தைகளைச் சொல்ல - மத் 1/20
9. பலப்படுத்த - லூக் 22/43
10. அசுத்த ஆவிகளோடு யுத்தம் பண்ண - மாற் 1/13
11. ஜெபங்களைக் கொண்டு செல்ல - யோவான் 1/51
12. பதிலைக் கொண்டுவர - யோவான் 1/51
13. துன்மார்க்கரைக் கட்டிப் போடும்படி - மத் 22/13
14. உறக்கத்தில் காத்திட - உன் 3/7
15. விழிப்பில் காத்திட - சங் 91/5
16. ஊழியம் செய்ய - எபி 1/14
17. முன் சென்றிட - யாத். 14/19
18. சபைக்கு செய்தியைக் கொண்டுவர - வெளி. 2/1
19. தேவாலயத்தைக் காத்திட - ஆதி. 3/24
20. தேவன் தம் பிள்ளைகளின் விசுவாசத்தைச் சோதித்திட
21. அவரை ஆராதித்திட - வெளி 19/3, 4
22. பாவிகளைத் தண்டிக்க - யூதா 15
23. தேவஜனங்களை தண்டனையில் தப்புவிக்க - ஆதி. 19/10-17

**252. தேவன் எவ்வாறு படைத்தார்?**

1. தேவன் அவர் வாயின் சுவாசத்தால் தூதர்களைப் படைத்தார். (சர்வ சேனைகள்) (சங் 32/6)
2. தேவன் அவர் வார்த்தையால் வானங்களைப் படைத்தார். (சங் 32/6)
3. தேவன் வார்த்தையால் உலகங்களை உண்டாக்கினார். (எபி 11/3)
4. தேவன் தமது வார்த்தையால் வெளிச்சம், ஆகாய விரிவு, வெட்டாந்தரை, சமுத்திரம், தாவரங்கள், சூரிய சந்திர நட்சத்திரங்கள், நீந்துபவை, பறப்பவை, மிருகங்கள், ஊர்வன யாவையும் படைத்தார். (ஆதி 1)
5. தேவன் தமது வார்த்தையால், கரத்தால், ஜீவசுவாசத்தால், மண்ணைக் கொண்டு மனிதனைப் படைத்தார். மனிதனுக்குள் ஆத்துமாவையும் ஆவியையும் வைப்பவர் அவரே (ஆதி 2/7)

**253. ஒத்தாசை பரலோகத்தினின்று வரமுடியுமா?**

1. ஆபிரகாம் சோதிக்கப்பட்ட வேளையில் பயிட ஆடு அவனுக்கு முட்செடிக்குள் கொடுக்கப்பட்டது. - ஆதி. 22/13

2. அப்போஸ்தலர்கள் சிறையிருந்தவேளையில் தூதன் அவர்களை வெளியே கொண்டு வந்தான் - அப் 5/18-24

3. பேதுரு சிறையிருந்த வேளையில் தூதன் அவனை வெளியே கொண்டு வந்தான் - அப் 12/5-11

4. பவுலும் சீலாவும் சிறையிருந்த வேளையில் எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று - அப் 16/23-26

5. ஆண்டவர் தம் தூதர்களை அனுப்பி பல தீமைகளுக்கு நம்மைத் தப்புவிக்கலாம் - சங் 34/7

6. ஆண்டவர் 5 அப்பத்தையும் 2 மீனையும் கொண்டு 5000 பேரை வனாந்தரத்தில் போஷித்தார் - மத்தேயு 16/9

7. ஆண்டவர் ஆகாருக்கு வனாந்தரத்தில் தண்ணீர் துரவைத் திறந்தார் - ஆதி 21/19

8. ஆண்டவர் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளந்து சிம்சோனின் தாகத்தைத் தீர்த்தார். - நியா 15/19

9. பஞ்சத்திலும் எயாவையும் விதவையையும் போஷித்த தேவன் நம் தேவன் - I இரா 17/9-16

10. தீங்கு செய்ய எண்ணின ஏசாவின் மனம் திரும்பச் செய்த தேவன் நம் தேவன் - ஆதி 33/1-4

11. தீங்கு செய்ய எண்ணிய லாபானைத் தடுத்த தேவன் நம் தேவன் - ஆதி 31/24

12 சிங்கங்களின் வாய்களை அடைத்த தேவன் நம் தேவன் - தானி 6/22, 23

13 அக்கினிக்குத் தப்புவித்த தேவன் நம் தேவன் - தானி 3/17, 18

14 சர்ப்பத்துக்குத் தப்புவித்த தேவன் நம் தேவன் - அப் 28/1-5

15 செங்கடலுக்குத் தப்புவித்த தேவன் நம் தேவன் - யாத் 15/19

16 குருட்டாட்டம் பிடிக்கப் பண்ண வல்ல தேவன் நம் தேவன் - ஆதி 19/11

17 கோராகு கூட்டத்தாரை பூமிக்குள் தள்ளின தேவன் நம் தேவன் - எண் 16/30-34

18 அபிமலேக்கை பாவம் செய்யாதபடிக்கு தடுத்த தேவன் நம் தேவன் - ஆதி 20/6

19 ராஜாக்களைத் தாழ்த்திய தேவன் நம் தேவன் - தானி 5/20,21

20 சாத்தானை மேற்கொள்ளச் செய்யும் தேவன் நம் தேவன் - லூக் 10/19

21 தீராத வியாதிகளையும் தீர்த்திட வல்லமையுள்ள தேவன் நம் தேவன் - மத் 4/24

மனுஷ ஒத்தாசைகள் மாறும் போதும், வாய்க்காத போதும், இல்லாத போதும் பரலோக ஒத்தாசைகள் கடந்து வரமுடியும் என்பதையும் விசுவாசிகள் விசுவாசிக்க வேண்டும்.

## 254. கடவுள் நம்மைப் படைத்த நோக்கம் என்ன?

1. ஒரு பக்தியுள்ள ஜனம் வேண்டும் என்பது அவர் நோக்கம். சோதனைக்காரன் நம்மைச் சோதித்தாலும் அவர் மேல் உள்ள பக்தியில் நிலைத்து நிற்க வேண்டும் (உம் : யோபு) மல்கியா 2/15
2. கர்த்தர் நம் விசுவாசத்தைச் சோதித்தாலும் அவர் மேல் உள்ள பக்தியில் நிலைத்து நிற்க வேண்டும். (உ ம் : ஆபிரகாம்)- ஆதி 22/1
3. கொடிய பாவிகள் நம்மைத் துன்பப்படுத்தினாலும் பக்தியில் நிலைத்து நிற்க வேண்டும் (சாத்ராத, மேஷாக், ஆபேத்நேகோ) தானி 3/17
4. கொடிய பஞ்சங்கள் வந்தாலும் தேவபக்தியில் நிலைத்து நிற்க வேண்டும் (உ ம் : ஆபிரகாம்) - ஆதி 12/10
5. கொடிய வியாதிகள் வந்தாலும் தேவபக்தியில் நிலைத்து நிற்க வேண்டும் (உ ம் : யோபு) - யோபு 1/21,22
6. கர்த்தரில் முழு இருதயத்தோடு, முழு ஆத்துமாவோடு, முழு பெலத்தோடு, முழு சிந்தையோடு எல்லா சூழ்நிலைகளிலும், வாழ்விலும் தாழ்விலும் அன்புகூருகின்ற ஜனமாய் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும் - மத் 22/37-39
7. கர்த்தரின் சித்தம் எந்த நிலமையிலும் நாம் நிறைவேற்ற வேண்டும் - மத் 7/21
8. கர்த்தரோடிருக்க வேண்டும் - II நாளா 15/2
9. கர்த்தரோடு சேர்க்க வேண்டும் - லூக் 11/23
10. பக்தியுள்ள சந்ததி உருவாக பிரயாசப்பட வேண்டும். - மல் 2/15

## 255. நம் தேவன் அற்புதர் என்று ஏன் சொல்கிறோம்?

1. அவர் காற்றுக்கு எல்லை வைத்துள்ளார் - மாற்கு 4/39
2. அவர் கடலுக்கு எல்லை வைத்துள்ளார் - யோபு 38/11
3. அவர் மேகத்தில் தண்ணீரை வஸ்திரத்தில் கட்டியது போல வைத்துள்ளார் - நீதி 30/4

4. அவர் உயிரில்லாதவைகளையும் (சூரியசந்திர நட்சத்திரங்கள்) நடத்துகிறார் - ஆதி 1/14-16
5. அவர் கோபத்தினால் பூமி அதிரும் - எரேமியா 10/10
6. அவர் செய்ய நினைத்ததை நடத்தி முடிக்க வல்லவர் - யோபு 42/2
7. மனிதன் (பொல்லாத) செய்ய நினைத்தவைகளைத் தடுக்க வல்லவர் - ஆதி 11/6-8

**256. பலிபீடங்களின் நோக்கங்கள் எவை?**

1. ஏதேன் தோட்ட பலிபீடம் : கர்த்தரோடு மனமகிழ்தல் - நீதி 8/31
2. ஆபேல் பலிபீடம் (ஆபேல்) : காணிக்கை அங்கீகரிக்கப்படல் - ஆதி 4/4
3. அரராத் மலை பலிபீடம் (நோவா) : கர்த்தர் ஆசீர்வதித்தல் - ஆதி 8/20, 21
4. மோரே சமபூமி பலிபீடம் : ஜீவ வாக்குத்தத்தம் அருளல்- ஆதி 12/7
5. பெத்தேல் - ஆயி பலிபீடம் (ஆபிரகாம்) : கர்த்தருடைய நாமங்களைச் சொல் தொழுகின்ற பலிபீடம் - ஆதி 13/4
6. மம்ரே சமபூமி பலிபீடம் (ஆபிரகாம்) - ஆதி 13/18
இது எபிரோனில் உள்ளது. எபிரோன் என்றால் உடன்படிக்கை என்று அர்த்தம். இப்பலிபீடத்தில் கர்த்தரோடு ஜீவபயால் உடன்படிக்கை பண்ண வேண்டும்.
7. பெயர்செபா தோப்பு பலிபீடம் (ஆபிரகாம்)

பெயர்செபாவில் சமாதான உடன்படிக்கை உண்டாயிற்று. அப்படியே இப்பலிபீடத்தில் மனுஷரோடே சமாதானமுண்டாகும்படி, மனுஷர்கள் சமாதானமாய் வாழும்படி ஜெபிக்க வேண்டும். தீவிரவாதிகளைக் கட்டி ஜெபிக்க வேண்டும். - ஆதி 21/33

8. மோரியா மலையில் யெகோவா யீரே பலிபீடம் (ஆபிரகாம்)

இப்பலிபீடத்தில் தேவன் நம் காரியங்கள் எல்லாம் பார்க்கும்படி ஜெபிக்க வேண்டும். - ஆதி 22/13, 14

9. ஈசாக்கு கட்டிய பெயர்செபா பலிபீடம் :

இப்பலிபீடத்தில் தேவன் நம்மையும் நம் ஊழியத்தையும் 100 மடங்கு ஆசீர்வதிக்க ஜெபிக்க வேண்டும். - ஆதி 26/25

10. யாக்கோபு கட்டிய சாலேம் பட்டணத்திற்கு எதிரான ஏல் எல்லோககே இஸ்ரேல் பபீடம் :

இஸ்ரேல் போல ஜெபத்தால் ஜெயம் எடுத்திட, ஜெபவீரர்களாய் மாற்றிட ஜெபிக்க வேண்டும். சாத்தான் மேல் சத்துருக்கள் மேல் வெற்றியருளிட ஜெபிக்க வேண்டும். (ஆதி 33/20)

11. பெத்தேல் யாக்கோபால் கட்டப்பட்ட ஏல் பெத்தேல் பபீடம் :

இப்பபீடத்தில் இந்திய தேசத்தில் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாக ஜெபிக்க வேண்டும். (ஆதி 35/7)

12. மோசே கட்டிய யெகோவா நிஸி பபீடம் :

இந்த பபீடத்தில் வானமண்டலப் பொல்லாத ஆவிகளோடு கர்த்தரின் சிங்காசன வல்லமைகள் யுத்தம் செய்யும்படி ஜெபிக்க வேண்டும். (உபா 25/19) (யாத் 17/15)

13. மோசே கட்டிய சீனாய்மலை அடிவார இரத்த பபீடம் :

இப்பபீடத்தில் இயேசுவின் இரத்த வல்லமை இறங்கி நம்மைப் பாதுகாக்கவும் நமக்காய் யுத்தம் செய்யவும் நம்மைப் பிரகாசிக்கப் பண்ணவும் ஜெபிக்க வேண்டும். (யாத் 24/4)

14. கிலகால் 12 கற்கள் பபீடம்:

15. ஏபால் பர்வத பபீடம் :

இப்பபீடத்திருந்து கர்த்தருடைய வசனங்களின் வல்லமை கருக்குள்ள பட்டயமாய் கடந்து செல்லும்படி ஜெபித்திட வேண்டும். (யோசுவா 8/26)

16. ஒப்ராவில் யெகோவா ஷாலோம் பபீடம் :

இப்பபீடத்தில் சமாதானம் நமக்குள், நம் வீட்டுக்குள், நம் சபைக்குள், நம் தேசத்துக்குள், நம் பூமியில் உண்டாக ஜெபிக்க வேண்டும். (நியா 6/26)

17. யெருபாகால் பபீடம் (நியா 6/32) :

இப்பபீடத்தில் விக்கிரக கோட்டைகள் கட்டோடு ஒழிந்திட ஜெபிக்க வேண்டும்.

18. சாமுவேல் பபீடம் (1 சாமு 7/17) :

இப்பபீடத்தில் தேவனுடைய நீதியின் செங்கோல் வல்லமை வெளிப்படும்படி, நியாயம் கிடைத்திட ஜெபிக்க வேண்டும்.

**19.** மிஸ்பா பபீடம் :

தேவனே சாட்சியாய் நின்று செம்மையாய் நியாயம் செய்யும்படி ஜெபிக்க வேண்டும். தேவன் அவனவன் கிரியைகட்கேற்ற பலன்களைக் கொடுக்கத் தக்கதாக ஜெபிக்க வேண்டும். (ஆதி 31/49,50)

**20.** கீலேயாத் மலை பபீடம் : (ஆதி 31/54,23)

இப்பபீடத்தில் குடும்பத்துக்குள், உறவினர்களுக்கிடையே சமாதானத்திற்காக ஜெபிக்க வேண்டும். கிலேயாத் பிசின்தைலம் உள்ள தேசம். இப்பபீடத்தில் அபிஷேகத்திற்காக ஜெபிக்க வேண்டும். (எரே 8/22)

**21.** கில்கால் பபீடம் :

இங்கே யோசுவா 12 யோர்தான் கற்களை நாட்டினான். (யோசு 4/20). இங்கே விருத்தசேதனம் பண்ணப்பட்டது. எகிப்தின் நிந்தை நம்மேல் இராதபடி புரட்டப்பட்டது (யோசுவா 5/9).

இப்பபீடத்தில் யோர்தானைக் கட்டி ஜெபிக்க வேண்டும். ஞானஸ்நானத்திற்காக ஜெபிக்க வேண்டும்.

**22.** தாவீதின் அர்வனாகள பபீடம் : (2 சாமு 24/25)

இங்கே தேவகோபம் நிறுத்தப்படும்படி ஜெபிக்க வேண்டும்.

**23.** எ யாவின் பபீடம் :

தேவன் அக்கினியை இறக்கவும், அக்கினியால் வழக்காடவும் ஜெபிக்க வேண்டும். (II இராஜா 18/30-39).

**24.** சாலமோன் பபீடம் :

இங்கே உடன்படிக்கை பெட்டி வல்லமை, ஆரோன் கோல் வல்லமை, வசனங்களின் வல்லமை வெளிப்பட ஜெபிக்க வேண்டும்.

**25.** செருபாபேல் பபீடம் : (சக 4/20)

இது கர்த்தரின் வீடாக செயல்படவும், ஆலய நன்மைகள் இறங்கிடவும் ஜெபிக்க வேண்டும்.

**26.** மகிமை நிறை ஆலயம் :

ஆண்டவரே மெய்யான தேவன் என்பது அவர் ஆலயத்தின் மூலம் வெளியரங்கமாகிட ஜெபிக்க வேண்டும். (எசே 44/4).

**257. கர்த்தரிடத்தில் கொல்லும் தூதர்கள் உண்டா?**

1. சங்கார தூதன் - ஏசாயா 37/36

2. 1 மணி நேரத்தில் கொல்லும் தூதன்
3. 1 நாளில் கொல்லும் தூதன்
4. 1 மாதத்தில் கொல்லும் தூதன்
5. 1 வருடத்தில் கொல்லும் தூதன்

} - வெளி 9/ 15

6. 7 வாதைகளுடைய 7 தூதர்கள் - வெளி 15/6
7. புழுபுழுத்து சாகப் பண்ணும் தூதன் - அப் 12/23 - 25
8. அக்கினிமயமான தூதர்கள் - II இரா 6/17
9. சிங்கொச்சிப்பு தூதர்கள் - வெளி 10/3

**258. கர்த்தரிடம் காக்கும் தூதர்கள் உண்டா?**

1. இரட்சிக்கப்பட்டவர்களுடன் இருக்கும் பாதுகாக்கும் தூதர்கள் - சங் 121/8
2. கால் இடறாதபடி காக்கும் தூதர்கள் - சங் 91/12
3. வழிகளில் எல்லாம் காக்கும் தூதர்கள் - சங் 91/11
4. யுத்தம் செய்யும் தூதர்கள் - வெளி 12/7
5. உறக்கத்தில் காக்கும் தூதர்கள் - உன் 3/7
6. சிங்கங்களின் வாய்களை அடைக்கும் தூதர்கள் - தானி 6/22
7. சிறையிருப்பினின்று விடுவிக்கும் தூதர்கள் - அப் 5/19
8. கட்டுகளை அவிழ்த்திடும் தூதர்கள் - அப் 16/25, 26
9. குணமாக்கும் வல்லமையைக் கொண்டு வரும் தூதர்கள் - யோ 5/4
10. குருட்டாட்டம் பிடிக்க வைக்கும் தூதர்கள் - ஆதி 19/10, 11
11. கட்டிப்போடும் தூதர்கள் - தானி 6/22
12. கட்டவிழ்க்கும் தூதர்கள் - அப் 12/7, 8
13. ஏறுகின்ற தூதர்கள் - யோ 1/51
14. இறங்குகின்ற தூதர்கள் - யோ 1/51

**259. சாத்தானுக்கு விரோதமாய் கர்த்தர் எப்படி யுத்தம் செய்வார்?**

1. சமுத்திரம் புரண்டு வரும் வேளையில் கதவுகளால் அடைக்க முடியும். (யோபு 38/8) (சாத்தானை)
2. மேகம் போல் ஆவியானவர் நம்மை மூட முடியும். (யோபு 38/9)
3. இருளைக் கொண்டு மூடி சாத்தான், சத்துரு காணமுடியாதபடி செய்வார் (யோபு 38/9)
4. இம்மட்டும் வா மிஞ்சி வராதே என்று சாத்தானின் பெருமைகளை அடக்க முடியும். (யோபு 38/11)
5. துஷ்டர்களை பூமியிருந்து உதறிப்போட முடியும் (யோபு 38/12)

6. வேறே ரூபம் கொள்ள வைத்து சாத்தானைக் கர்த்தர் ஏமாற்ற முடியும். (யோபு 38/14)
7. வஸ்திரம் தரித்தது போல் எல்லாவற்றையும் மூடி மறைக்க முடியும். (யோபு 38/14)
8. துன்மார்க்கரின் ஒளியை அவர்களைவிட்டு எடுபடச் செய்ய முடியும். (யோபு 38/15)
9. மேட்டிமையானவர்களின் புயங்களை முறிக்க முடியும். (யோபு 38/15)
10. ஆழத்தில் உள்ள அந்தகாரக் கிரியைகளை அழிக்க முடியும். (யோபு 38/16)
11. மரண இருளின் வாசல்களைத் திறந்து மரணக்கட்டுகளை அழிக்க முடியும். (யோபு 38/17)
12. கர்த்தர் வெளிச்சத்தை அனுப்பி இருளை அகற்ற முடியும். (யோபு 38/19)
13. கர்த்தர் இருளை அனுப்பி சாத்தானைக் குழப்பிட முடியும். (யோபு 38/19)
14. உறைந்த மழையை சாத்தானுக்கு விரோதமாய் அனுப்பிட முடியும். (யோபு 38/22)
15. கல்மழையை சாத்தானுக்கு விரோதமாய் அனுப்பிட முடியும் (யோபு 38/22)
16. கீழ்காற்றாய் ஆவியானவர் கடந்து வந்து யுத்தம் பண்ண முடியும். (யோபு 38/22)
17. இணைக்க வேண்டியவைகளை அவரால் இணைக்க முடியும். (யோபு 38/31)
18. கட்டிப்போட வேண்டியவைகளை அவரால் கட்டிப்போட முடியும் (யோபு 38/31)
19. அவர் தூதர்களை அனுப்ப முடியும் (யோபு 38/32)
20. ஏராளமான தண்ணீராய் ஆவியானவர் நம்மேல் பொழிய முடியும் (யோபு 38/34)
21. மின்னல்களை அவர் சாத்தானுக்கு விரோதமாய் அனுப்ப முடியும் (யோபு 38/35)
22. அந்தக்கரணங்களில் ஞானத்தை வைத்து அந்த ஞானத்தால் சாத்தானை ஜெயிக்க வைக்க உதவுவார். (யோபு 38/36)
23. ஆகாயத்துருத்திகளில் உள்ள தண்ணீராய் ஆவியானவர் வல்லமையாய் இறங்கி யுத்தம் பண்ண முடியும். (யோபு 38/38)

24. சிங்கக் குட்டிகளாய் மாற்ற முடியும். (யோபு 38/40)

25. வரையாடுகள் போன்ற ஆவிகள், மான்கள் போன்ற ஆவிகள், காட்டுக்கழுதை போன்ற ஆவிகள், காண்டாமிருகம் போன்ற ஆவிகள், தீக்குருவிகள் போன்ற ஆவிகள், குதிரை போன்ற ஆவிகள், ராஜாளி போன்ற ஆவிகள், கழுகு போன்ற ஆவிகள், வியாதான் போன்ற ஆவிகள், பிகெமோத் போன்ற ஆவிகள் யாவையும் கர்த்தரால் அழிக்க முடியும். (யோபு 39, 40)

26. சிவந்த சமுத்திரம் போன்ற ஆவிகளை அவர் அதட்டமுடியும். வற்றப் பண்ண முடியும் ; பிளந்துபோட முடியும். (சங் 106/9)

27. அவர் புயத்தின் வல்லமையால் பொல்லாதவர்களோடும் பொல்லாத ஆவிகளோடும் யுத்தம் பண்ண முடியும். (யோபு 40/9)

28. துன்மார்க்கரை அவர்களிருக்கிற ஸ்தலத்திலே மிதித்துப் போட முடியும். (யோபு 40/12)

29. பெருமையுள்ளவர்களைப் பணியச் செய்ய முடியும். (யோபு 40/13)

30. துன்மார்க்கரைப் புழுதியில் புதைக்க முடியும். (யோபு 39/13)

**260. கர்த்தர் தரிசனமான இடங்கள் எவைகள்?**

1. ஆபிரகாமுக்கு மெசபதோமியாவில் தரிசனமானார். (அப் 7/2)
2. அவனுக்கு கானானில் மோரே என்னும் சமபூமியில் தரிசனமானார். (ஆதி 12/7)
3. ஆகாருக்கு வனாந்தரத்தில் வானத்தில் தரிசனமானார் (ஆதி 16/7)
4. ஆபிரகாமுக்கு மம்ரே சமபூமியில் தரிசனமானார் ( 3 புருஷர்). (ஆதி 18/2)
5. கேராரிலே ஈசாக்குக்குத் தரிசனமானார். (ஆதி 26/2)
6. யாக்கோபுக்கு யாப்போக்கு ஆற்றருகே தரிசனமானார். (ஆதி 32/22)
7. மோசேக்கு ஓரேப் பர்வதத்தில் முட்செடியில் தரிசனமானார் (யாத் 3/1, 2)
8. சாலமோனுக்கு சொப்பனத்தில் தரிசனமானார் (1 ராஜாக்கள் 3/5)
9. யாக்கோபுக்கு சொப்பனத்தில் லூஸில் தரிசனமானார் (ஆதி 28/12-19)
10. பவுலுக்கு வானத்திருந்து தமஸ்குவுக்கு சமீபமாய் தரிசனமானார். (அப். 9/5)
11. ஒப்ராவில் கர்வா மரத்தின்கீழ் கிதியோனுக்குத் தரிசனமானார்.. (நியா. 6/11)

12. பத்மு என்னும் தீவில் ஆவிக்குள்ளானபோது யோவானுக்குத் தரிசனமானார் (வெளி 1/10)
13. எசேக்கியேலுக்கு கேபார் நதியண்டையில் தரிசனமானார். (எசே 1)
14. தானியேல் சொப்பனத்தில் நீண்ட ஆயுசுள்ளவரைக் கண்டான். (தானி. 7/9)

**261. தீமையான அக்கினிகள் எவைகள்?**

1. சாத்தானின் அக்கினி (எபே. 6/16)
2. சூனியங்களால் செயல்படும் அக்கினி (ஏசா 47)
3. மனுஷரின் எரிச்சன் அக்கினி. (மாற்கு. 7/20, 21)
4. மனுஷரின் பொறாமையின் அக்கினி. (மாற்கு. 7/22)
5. மனுஷரின் இச்சையின் அக்கினி (மாற்கு 7/20, 21)
6. மனுஷரின் பொய்சாட்சி அக்கினி (யாத் 20/16)
7. மனுஷரின் தூஷண அக்கினி (மாற்கு 7/22)
8. மனுஷரின் சாப அக்கினி (யாக். 3/9,10)
9. மனுஷரின் பெருமையின் அக்கினி (மாற்கு 7/22)
10. மனுஷரின் மதிகேட்டின் அக்கினி (மாற்கு 7/22)
11. மனுஷரின் பகைக்கும் அக்கினி (மாற்கு 7/21)
12. மனுஷரின் கொலைவெறி அக்கினி (மாற்கு 7/20, 21)

**262. தீமையான அக்கினிகளை மேற்கொள்வது எப்படி?**

1. வேதவசனங்களை வாசிக்க வேண்டும். கேட்க வேண்டும். வாயினால் சொல்ல வேண்டும். தியானம் பண்ண வேண்டும். இருதயத்தில் எழுத வேண்டும். விசுவாசிக்க வேண்டும். விசுவாசித்து ஜெபிக்க வேண்டும். அப்பொழுது தியான அக்கினி மூளும். அது தீமையான அக்கினிகளை அழிக்கும் (சங். 39/3)
2. அக்கினிமயமான தூதர்கள் அக்கினிகளை அவிக்க முடியும். II இ 6/17
3. ஆண்டவர் பபீட அக்கினி மற்ற அக்கினிகளை அவிக்க முடியும் (தானி. 7/10)
4. கேருபீன்கள் மத்தியில் உள்ள அக்கினி மற்ற அக்கினிகளை அழிக்க முடியும். (எசே. 10/2)
5. அக்கினிமயமான இரதங்கள், குதிரைகள் அழிக்க முடியும். (II இ 6/17)
6. ஆண்டவரின் கண்களின் அக்கினி வார்த்தையின் அக்கினி, நாசியின் அக்கினி, சுவாச அக்கினி, கால்களின் அக்கினி,

ஆவியானவரின் அக்கினி, சிங்காசன அக்கினி அழிக்க முடியும் (வெளி. 1/14)

7. ஆண்டவரே! அக்கினிமயமானவராய் கடந்து வந்து சுட்டெரிக்க முடியும். (ஏசாயா 10/17)

**263. சாத்தானின் பூர்வீகம் என்ன? முடிவு என்ன?**

1. இவன் ஆரம்பத்தில்
   a) விசித்திரமாய் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்
   b) இவன் ஞானத்தால் நிறைந்தவன்
   c) தேவனுடைய தோட்டமாகிய பரலோக ஏதேனில் இருந்தவன்
   d) இவன் ஒரு கேரூப்
   e) பரிசுத்த பர்வதத்தில் இருந்தவன் என்று எசேக்கியேல் 28/12-14 சொல்கிறது.
2. இவனை அதிகாலை மகனாகிய விடிவெள்ளி என்று எசாயா 14/12 சொல்கிறது.
3. இவனிடத்தில் மேளவாத்தியங்களும் நாகசுரங்களும் ஆயத்த மாக்கப்பட்டு இருந்ததாக எசேக்கியேல் 18 சொல்கிறது. எனவே இவன் CHOIR MASTER போன்ற ஒரு வேலையை செய்திருப்பான்.
4. இந்த சாத்தான் உன்னதமானவருக்கு ஒப்பாக வேண்டும் என்ற எண்ணம் கொண்டான் என்பதை ஏசாயா 14/14 சொல்கிறது. இவன் தன்னை ஆராதிப்பதை விரும்புபவன் என்பதை மத்தேயு 4/10ல் பார்க்கிறோம்.
5. வெளி12ல் இந்த பெரிய வலுசர்ப்பத்தின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் 1/3 பங்கை இழுத்தது என்று வாசிக்கிறோம். எனவே இந்த அதிகாலை மகனாகிய விடிவெள்ளி போருந்தவன் தன்னை ஆராதிக்கும்படி தூதர்களில் 1/3 பங்கை வஞ்சித்தான்.
6. தங்கள் ஆதிமேன்மையை இந்த சாத்தானும் மூன்றில் ஒரு பங்கு தூதர்களும் காத்து கொள்ளவில்லை என்று யூதா 6 சொல்கின்றது.
7. எனவே கடவுள் இந்த சாத்தானையும் அவனோடு கூட்டணி வைத்த மற்ற தூதர்களையும் ஆகாதென்று தள்ளிப் போட்டார். மகா பயங்கரமாக்கினார். அழகும் ஞானமும் கெட்டது. வேடிக்கையாக்கினார். இவனும் இவன் கூட்டமும் பழைய இருளான காற்றுமில்லாத உயிரினங்களும் மனிதனுமில்லாத பூமியில் தள்ளப்பட்டன. (எசே. 28/17, 18, 19) (எசாயா 14/15)
8. ஆண்டவர் இந்த தூதர்களுக்குப் பதிலாக பூமியைப் புதியதாக்கி மண்ணை எடுத்து மனிதனைப் படைத்தார். மனிதன் அவரை ஆராதிப்பதற்காகப் படைத்தார். (ஆதியாகமம் 2) (மல்கியா 2/15)

9. மனிதனோடு மகிழ்ந்து கொண்டிருந்தார். (நீதி 8/31). ஏதேன் தோட்டத்தில் உலாவுகிறவராய் இருந்தார். (ஆதி. 3/8) (ஆதி 2/19)

10. தோட்டத்தைக் காவல் செய்யும்படி மனிதனுக்கு கட்டளையிட்டார் (ஆதி 2/15). மனிதன் சரியாகக் காவல் செய்யாதபடியால் சர்ப்பவடிவில் சாத்தான் உள்ளே பிரவேசித்தான். அவன் ஏவாளிடம் விலக்கப்பட்ட கனியைப் புசித்தால் கடவுளைப்போல் ஆகலாம் என்று ஏமாற்றினான். அந்த எண்ணத்தால் அவளும் புசித்து அவள் புருஷனும் புசித்தான். மனிதன் அற்பமான சரீரம் பெற்றான். (ஆதி. 3)

11. தேவனாகிய கர்த்தர் சாத்தானைப் பார்த்து மண்ணைத் தின்பாய் என்றார். எனவே அசுத்த ஆவிகள் விக்கிரகம், சொரூபம் மூலமாகவே செயல்படுகின்றன. வயிற்றினால் ஊர்வாய் என்று சபித்தபடியால் அவைகள் பரலோகம் செல்லமுடியாது. இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகளை அது விரோதிக்கிறது. கர்த்தராகிய இயேசுவின் உதவியால் அல்லாமல் அவைகளை மேற்கொள்ள முடியாது. (ஆதி 3/15)

12. இப்பொழுது சாத்தான் உலக சிநேகமுள்ள ஜனங்களுக்கு அதிபதியாக செயல்படுகிறான். (லூக். 4/6) (யோவான் 14/30)

13. இப்பொழுது சாத்தான் சோதனைக்காரனாய் செயல்படுகிறான். தேவனுடைய அனுமதியோடு அவன் தேவபிள்ளைகளைச் சோதிக்க முடியும். (யோபு 1/11) (லூக்கா 22/31)

14. சாத்தான் எவ்வளவு சோதித்தாலும் தேவநாமத்தை தூஷிக்காதபடி விசுவாசத்திலும் தேவன் மேல் உள்ள அன்பிலும் தேவசித்தம் செய்கிற காரியத்திலும் நிலைத்து நின்றால் தேவன் நித்திய வாழ்வு தருவார். (யோபு 1/22)

15. இந்த பிசாசையும் அவனைச் சேர்ந்த தூதர்களுக்கும் இரட்சிப்பு கிடையாது. மனந்திரும்பி அவரை அண்டிக் கொண்டு அவரோடு உடன்படிக்கை பண்ணி அவரை ஆராதித்து தேவசித்தம் செய்பவர்க்கு இரட்சிப்பும் நித்திய வாழ்வும் உண்டு. (எபி 2/16)

16. சாத்தானுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆண்டவர் பாதாளத்தை வைத்துள்ளார். இங்கே புழு, பூச்சி, நாற்றம், தாகம், வேதனை, உஷ்ணம் உண்டு. அசுத்த ஆவிகளை அவர் சபித்து இங்கே தள்ளுகின்றார். (லூக்கா 8/31) (ஏசாயா 14/11)

17. சாத்தானுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் நித்திய அக்கனியாகிய கடலை வைத்துள்ளார். அங்கே சதாகாலமும் வாதிக்கப்படும். (வெளி 20/10) (மத் 25/41)